## 38. திருக்கன்னிநாடு.

*கலிநிலைத்துறை.*

*பண் - இந்தளம்.*

**சீ**ருளா ரேத்துஞ் சீருடை நஞ்சிவ பெருமான்
கூருலாம் வேற்கை யோடன வரதமுங் குறைவில்
பாரெலா மேத்துங் கன்னிநா டுறைதரு பாங்கை
ஓரெலா வார்ப்பு மொருங்கியுய் வாயென துளமே. 1

**வா**க்குவன் மனதான் மதிக்கரு நஞ்சிவ பெருமான்
நோக்கொரு பனிரண் டிலகொரு நூனமி லுருவாய்ப்
பாக்குகு பொழிலார் கன்னிநா டுறைதரு பாங்கை
ஊக்கமொ டுணரின் வாழ்குவை நாளுமெ னுளமே. 2

**ஞா**னிகள் விழையொண் பொருளெனு நஞ்சிவ பெருமான்
மேனிலை விழைவோர்க் கருளவெ னாமயின் மீது
பானிற வனம்வாழ் கன்னிநா டுறைதரு பாங்கை
நீநினை வாயே னிதநனி யுய்குவை நெஞ்சே. 3

**ந**ந்தலின் மறைகள் பழிச்சிடு நஞ்சிவ பெருமான்
செந்திரு முகமா றவிரரு ளுருவொடு தீமைப்
பந்தரைப் புரப்பான் கன்னிநா டுறைதரு பாங்கைச்
சிந்தைசெய் வாயேன் மனமினி துய்வது திடமே. 4

**மா**தவ னளித்த மதிப்பொரு ணஞ்சிவ பெருமான்
ஏதமி லடியார்க் கருளவெ னாமுரு கெனமா
பாதகந் தீர்த்த கன்னிநா டுறைதரு பாங்கை
நீதெரி வாயேன் மருடபுத் துய்குவை நெஞ்சே. 5

**எ**க்குணங் குறியு மிலாமுத னஞ்சிவ பெருமான்
பக்குவர்க் கருளும் பரிவொடு தேவிய ருபய
பக்கமும் விளங்கக் கன்னிநா டுறைதரு பாங்கைச்
சிக்குடை நெஞ்சே கருதிடிற் சார்வது சிவமே. 6

**பூ**வினில் வெறிபோற் பொருந்திய நஞ்சிவ பெருமான்
கோவிலி னிலவோர் வடிவொடு குகப்பெயர் பூண்டு
பாவிகள் பழிதீர் கன்னிநா டுறைதரு பாங்கைத்
தாவிளை நெஞ்சே கருதிடி னிலைநமன் றமரே. 7

**எ**ங்கணு நிறைவா யிருந்துள நஞ்சிவ பெருமான்
சங்கரன் மகவாய்ச் சரவண பவப்பெயர் சார்ந்து
பங்கமி னதிபாய் கன்னிநா டுறைதரு பாங்கை
இங்குழ னெஞ்சே நினைவுறின் மறலுனக் கிலையே. 8

**அ**ழிவுதிப் பணவா வறிவெனு நஞ்சிவ பெருமான்
இழிமனச் சீவர்க் கருள்வண மயின்மிசை யிந்த்ரன்
பழிதனை நூறுங் கன்னிநா டுறைதரு பாங்கை
எழிலொடு நெஞ்சே நினைவுறின் வருபிறப் பிறுமே. 9

**த**த்துவா தீதத் தனிப்பொரு ணஞ்சிவ பெருமான்
வித்தைசால் புகழ்பா டியமுனி பாத்தொடை விரும்பிப்
பத்தர்பா டிடவே கன்னிநா டுறைதரு பாங்கைச்
சித்தமே நீயுள் கிடிலடை வதுவிழுச் சிவமே. 10

மன்மத வருடம் புரட்டாதி மாதம் 7ஆம் தேதி ஆதித்தவாரம்.